மாண்புமிகு திரு. செ. மாதவன் : மத்திய அரசின் நிதி உதவியைப் பொறுத்து அதுபற்றி பரிசீலனை செய்யப்படும்.

Manufacture of Synthetic detergents

*130 Q.—THIRUMATHI T. N. ANANDANAYAKI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that the Government of Tamil Nadu recommended the licence applied by Tata's for starting a synthetic detergents unit in Tamil Nadu; and

(*b*) if so, whether any letter of indent has been receievd from the Centre for such a licence ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் :

(அ) & (இ) : சென்னையில் "சிந்தடிக் டிட்டர்ஜியண்ட்" தொழிற்சாலை ஒன்றை நிறுவ உரிமம் கோரி கீழ்க்கண்ட 5 நிறுவனங்கள் மத்திய அரசுக்கு மனுச் செய்து கொண்டன:

1. பிரிட்டானியா பிஸ்கட் கம்பெனி லிமிடெட்.
2. அல்ட்ராமெரைன் அண்டு பிக்மெண்ட்ஸ் லிமிடெட்.
3. செஞ்சுரி ரேயான், பாம்பே.
4. டாடா ஆயில் மில்ஸ் லிமிடெட், பாம்பே.
5. டை. இச்சி. கார்காரியா (பி) லிமிடெட், பாம்பே.

தமிழக அரசு எல்லா மனுக்களுக்கும் உரிமம் வழங்க மத்திய அரசுக்கு பரிந்துரைத்தது. மத்திய அரசு அல்ட்ராமெரைன் அண்டு பிக்மெண்ட் லிமிடெட் நிறுவனத்திற்கு உரிமம் வழங்கியது. மற்ற மனுக்களை நிராகரித்து விட்டது.

Mica Mines

*131 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that Mica Mines are available in this State; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் :

(அ) & (இ) ஆம். காக்காய்ப்பொன் சுரங்கங்கள் (மைக்கா) நீலகிரி மாவட்டம் கூடலூர் வட்டத்தில் கூடலூர், சேரம்பாடிக்கிடையில் அநேக இடங்களிலும், கோலப்பள்ளியைச் சுற்றிலும், சேரங்கோட்டிலும் இருக்கின்றன. சேரம்பாடி, கோலப்பள்ளி